29

பாதாளம்

கால் வலிக்கிறது.

பதினைந்து நாட்களாக முழங்காலில் வலி. சில சமயங்களில் சுத்தமாக எழுந்திருக்கவே முடியாமல் போய்விட்டிருந்திருக்கிறது. கதைக்குக் கால் வேண்டியிருக்கிறதோ இல்லையோ கதை எழுது வதற்குக் கால் வேண்டியிருக்கிறது. காலும் ஒரு பழக்கந்தான். காலில்லாதவர்களும், காதில்லாதவர்களும், கண்ணில்லாதவர்களும், பேச முடியாமல் போனவர்களும்கூட எழுதியிருக்கிறார்கள்.

எழுத வேண்டும் என்ற உறுதியான மனதிருந்தால் போதும், எழுதி விடலாம் என்றுதான் கூறவேண்டும். ஆனால் மனம் தவிக் கிறது. தவிப்பதிலேயே எவ்வளவோ காலத்தைக் கழித்து விடுகிறது. காலம் என்பதே மனதின் ஒரு சிருஷ்டிதான். மனம் இல்லாவிட்டால் காலம் சாத்தியமில்லை. அதே போல இந்த உலகமும் மனதின் சிருஷ்டிதான். எவ்வளவு ஜீவராசிகள் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் இருக்கின்றன! இந்த மனித மனதிற்கு, ஒவ்வொரு தனிமனித மனதிற்குமுள்ள உலகம் போலல்லவே அதன் உலகம்?

எவ்வளவோ நாட்களுக்கு முன்பு ஓர் ஆலமரம் என் உலகமா யிருந்தது. பெரிய மரம். ஆனால் விசேஷமான மரமல்ல. அடி மரம் நான்கடி உயரம்கூட இருக்காது. ஆனால் நான்கடி ஏறிவிட்டால் அப்புறம் பதினைந்து திசைகளிலும் கோணங்களிலும் ஏறிப்போகக் கிளைகள். கிளைகளிலிருந்து உபகிளைகள். அப்புறம் விழுதுகள் மரமே தனக்குத் திரையிட்டுக் கொள்வது போல எல்லாப் பக்கங்களிலிருந்தும் உயரத்திலிருந்து தொங்கும்.

ஒரு கோடைக்காலத்தில் நானும் இன்னும் நான்கைந்து பேரும் இந்த உபகிளைகளிலிருந்து தொங்கும் சில விழுதுகளை வேறு கிளைகளின் விழுதுத் துண்டுகள் கொண்டு சேர்த்துக் கட்டிக் கூண்டு மாதிரி ஒன்று சிருஷ்டித்தோம். மரத்தில் ஏறி ஒரு சிறு இடைவெளி வழியாகக் கூண்டுக்குள் நுழைய வேண்டும். கூண்டின்

கூரைப்பகுதியை மெல்லிய விழுதுகளால் பின்னி இலைகள் தழைகளால் மூடினோம். அந்தக் கூரையின் கூரைத் தன்மையைப் பரிசோதித்துப்பார்க்க மழைக்காக காத்திருந்தோம். கூரைக்குச் சோதனை தருவதில் சூரியனுக்குச் சாமர்த்தியம் போதாது. ஆனால் மழை அப்படியல்ல. அப்போது நானிருந்த ஊர் மழைக்குப் பேர் போனது கிடையாது. அங்கு வருடமெல்லாம் பெய்யும் மழை இங்கு சென்னையில் நான்கு நாட்களில் கொட்டிவிடுகிறது.

ஒருநாள் மழை பெரிதாகப் பெய்ய ஆரம்பித்தவுடன் நான் அந்தக் கூண்டுக்கு ஓடினேன். தொப்பலாக நனைந்து கொண்டு மரத்தின் மீதேறிக் கூண்டுக்குள் என்னை நுழைத்துக்கொண்டேன். கூண்டுக்குள் மழை புக முடியவில்லை. சிறிது நேர மழைக்குப் பிறகுதான் ஒரு சில இடங்களில் சுற்றிலுமிருந்து கிளைகள் விழுதுகள் வழியாகத் தண்ணீர் கசிய ஆரம்பித்தது. கசிந்த நீர் அப்படியே கிளைகள் வழியாகக் கீழே போய்விடும். எனக்கு ஓரடி ஒன்றரை அடிக்கு எப்போதும் ஈரமற்ற இடம் அந்தக் கூண்டுக்குள் இருந்தது. ஆயுட்காலமெல்லாம் அந்தக் கூண்டுக்குள் கழித்து விடலாம் என்று தோன்றியது. அந்த ஆலமரத்தில் கட்டை எறும்புகள் உண்டு. கட்டை எறும்பு கடித்து இரத்தம் வந்து கூட நான் பார்த்திருக்கிறேன். அன்றும் அந்தக் கூண்டுக்குள் எறும்புகள் கண்ணில் படத்தான் செய்தன. முதலில் எனக்கும் பயந்தான். ஆனால் அவை கடிக்கவில்லை. அவை கடிக்காமாலிருந்து இடைவெளி அதிகமாக அதிகமாக எனக்குப் பயம் போய்விட்டது. எது எதையோ இழந்துவிட்டு வந்தபோது பெரிய ஏக்கம், மாறாத ஏக்கம் தோன்றவில்லை. ஆனால் அந்தக் கூண்டு இப்போதும் ஏக்கத்தைத்தான் உண்டு பண்ணுகிறது.

சமீபத்தில் சில ஆண்டுகள் முன்பு அந்த ஊருக்குப் போக நேர்ந்த போது துடிக்கும் மனதோடு அந்த ஆலமரத்தைப் பார்க்கச் சென்றேன். மரம் இருந்தது. ஆனால் சுற்றுப்புறத்தில் நிறைய மாற்றங்கள். விசாலமான திறந்த வெளியில் தனியாகக் கம்பீரமாக நின்றிருந்த மரத்தைச் சுற்றி இப்போது பல வரிசை வீடுகள். உண்மையில் அந்த மரத்தைக்கூட அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. கீழே தரை இன்னமும் உயர்ந்திருந்தது. மரம் பல பகுதிகளைத் தானாகவும் பிறராலும் இழந்து விட்டிருந்தது. மரமே கறுத்துப் போயிருந்த மாதிரி இருந்தது. மரத்தில் நாங்கள் சிருஷ்டித்த கூண்டின் சுவடே தெரியவில்லை. ஆனால் நன்கு கூர்ந்து பார்த்ததில் கூண்டு கட்டுவதற்காக அடித்திருந்த ஒரு ஆணி இன்னமும் காணக் கிடைத்தது. ஆணியின் தலை கிளையில் புதைந்து போயிருந்தது. வேறு யாருக்கும் அந்தப் பள்ளம் அந்தக்

கிளையின் இதர மேடுபள்ளங்களிலிருந்து மாறுபட்டது என்று தெரிய நியாயமில்லை. அந்தப் பள்ளத்தை நான் கண்டு கொண்டவுடன் ஆர்வத்துடன் அந்த ஆணியின் தலையை தொட்டுப் பார்க்க முயற்சி செய்தேன். சுண்டு விரலால்தான் முடிந்தது. அதுகூட விரல் ஆணியைத் தொட்டதா மரக்கிளைப் பள்ளத்தின் வேறு பகுதியைத்தான் தொட்டதா என்று உறுதியாகக் கூற முடியாது. அந்தப் பள்ளம் பாதாளமாகத் தோன்றியது. இறந்தவர்கள் எல்லாரும் பாதாளத்திற்குத்தான் போகிறார்கள் என்று சிலர் நம்புகிறார்கள். மனிதன் தோன்றியதிலிருந்து எவ்வளவு பேர் இறந்திருப்பார்கள்? எவ்வளவோ கோடிக் கோடிப் பேர். அத்தனை பேரும் அந்தப் பாதாளத்தில். இருக்கும்போது சொல்கிறோம், இவன் ராசா, இவன் வாத்தியார், அவன் குமாஸ்தா, அவன் கடையில் வேலை பார்க்கிறவன், இவன் டாக்டர், இவன் பத்திரிகையில் வேலை பார்க்கிறான், இவன் இன்ஜினீயர், இவன் ஹோமியோபதி டாக்டர்... இந்தப் பள்ளத்தில் அவர்கள் எல்லாரும் என்ன பண்ணிக் கொண்டிருப்பார்கள்? பாதாள டீச்சர், பாதாள டாக்டர், பாதாள இன்ஜினீயர், பாதாள குமாஸ்தா, பாதாளக் கதாசிரியை... பாதாளத்திற்குப் போய்க் கூட வெளியுலகத்தில் ஈடுபட்டிருந்த பணிகளையே தொடர வேண்டுமா? இருக்காது. பாதாளத்தை நரகமென்று கொள்வாரும் உண்டு. நரகத்தில் வேதனையிருந்தாலும் இந்த உலகத்தின் கட்டு திட்டங்களும் தேவைகளும் இருக்க முடியாது. நிறைய ஓய்வு இருக்கும். அந்த ஓய்வை நினைத்தால் இப்போதே பாதாளத்திற்குப் போய்விட வேண்டும் போலத் தோன்றுகிறது. அதற்குத்தான் அந்த ஆலமரத்துக் கிளையில் இருந்த பள்ளமொன்றில் எப்போதோ அடித்த ஆணியின் தலையை தேடினேனோ?

இப்போது ஓய்வு இல்லை. ஓய்வு இல்லாத நிலையில் கால் வலி வேறு விண்விண்ணென்று தெறிக்கிறது. வலி இன்னும் ஒருநாள் அல்லது ஒருவாரம் அல்லது ஒரு மாதத்தில் போய் விடக்கூடும். ஆனால் மரக் கூண்டு தந்த ஓய்வு இனி சாத்தியமே இல்லை போலிருக்கிறது.

1985